முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி மு.ராஜேந்திரன் எழுதிய

# 'காலா பாணி' நாவலுக்கு சாகித்ய அகாடமி விருது

புதுடெல்லி, டிச.23-

முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி மு.ராஜேந்திரன் எழுதிய 'காலா பாணி' என்கிற நாவல் சாகித்ய அகாடமிக்கு தேர்வு செய்யப்பட்டு உள்ளது.



ராஜேந்திரன்

## சாகித்ய அகாடமி விருது

நாவல், நாடகம், சிறுகதை, விமர்சனம், காவியக்கவிதை போன்ற இலக்கிய படைப்புகளுக்கு நாட்டில் வழங்கப்படும் மிக உயரிய விருது 'சாகித்ய அகாடமி' விருது. மத்திய அரசின் தன்னாட்சி அமைப்பான சாகித்ய அகாடமி நிறுவனம் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஆங்கிலம், குஜராத்தி உள்ளிட்ட 24 மொழிகளில் வெளியாகும் சிறந்த படைப்புகளுக்கு ஆண்டுதோறும் சாகித்ய அகாடமி விருதை அறிவிக்கிறது.

அதன்படி 2022-ம் ஆண்டுக்கான விருதுகள் பெங்காலி மொழி தவிர (பின்னர் அறிவிக்கப்படும்) 23 மொழிகளுக்கு நேற்று அறிவிக்கப்பட்டன. சாகித்ய அகாடமி தலைவர் சந்திரசேகர் கம்பார் தலைமையிலான குழு இதனை அறிவித்தது.

இதில் 7 கவிதை நூல்கள், 6 நாவல்கள், 2 சிறுகதைகள், 3 நாடகங்கள், 2 இலக்கிய விமர்சனங்கள், தலா ஒரு சுயசரிதை, கட்டுரைகளின் தொகுப்பு மற்றும் இலக்கிய வரலாறு ஆகியவை விருதை வென்றுள்ளன.

## காலா பாணி

தமிழில் 'காலா பாணி' என்ற நாவல், விருதுக்கு தகுதி பெற்றுள்ளது. இந்த நாவலை மதுரை [illegible] வடகரையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி மு.ராஜேந்திரன் எழுதியுள்ளார்.

இதனை சிறந்த நாவலாக ஜி.திலகவதி, கலாப்ரியா, ஆர். வெங்கடேஷ் ஆகியோரை கொண்ட நடுவர்குழு தேர்வு செய்தது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் விடுதலை போராட்டத்தை தொடங்கி வைத்தது தென்தமிழகம். ஆங்கிலேயர்கள் தங்களுடன் மோதுபவர்களுக்கு மிருகத்த அச்சத்தை உருவாக்க போராளிகளை தூக்கிலிட்டார்கள். 1802-ம் ஆண்டு போராளிகளை முதன்முறையாக நாடு கடத்தினார்கள். நாடு கடத்துவதை 'காலா பாணி' (கறுப்புத் தண்ணீர்) என்றழைத்தார்கள் ஆங்கிலேயர்கள்.

தென்தமிழகத்தில் இருந்து சிவகங்கை அரசர் வேங்கை பெரிய உடையணத்தேவரும், போராளிகள் 71 பேரும் பினாங்குக்கு நாடு கடத்தப்பட்டார்கள். 73 நாட்கள் நீடித்த கடுமையான கடல் பயணத்திற்கு பிறகு, அரசியல் கைதிகள் பினாங்கில் சிறை வைக்கப்பட்டனர். பெரிய உடையணத்தேவரை மட்டும் பினாங்கில் இருந்து சுமத்திரா தீவிற்கு மாற்றினார்கள். அங்கு மால்பரோ கோட்டையில் சிறைவைக்கப்பட்ட அரசர், நான்கு மாதங்களில் இறந்து போகிறார்.

## போராளிகளின் துயரம்

தூத்துக்குடியில் இருந்து போராளிகள் கப்பலில் அழைத்து செல்வதில் தொடங்கி, மால்பரோ கோட்டையின் சிறையில் சிவகங்கை அரசர் உயிர்விடுவது வரையிலான சம்பவங்களைத் துயரக் காவியமாக எழுதியுள்ளார் மு.ராஜேந்திரன். கப்பல் பயணமும், போராளிகளின் துயரமும் படிப்பவரைக் கண்ணீர் விட வைக்கும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

காலா பாணி நாவலை எழுதுவதற்காக மு.ராஜேந்திரன் பினாங்குத் தீவுக்கும், சுமத்திரா தீவுக்கும் பயணம் சென்று வந்திருக்கிறார். ஆவணக்காப்பகங்களில் இருந்து நாவலுக்கான ஆதாரங்களை திரட்டியிருக்கிறார்.

## திருவண்ணாமலை கலெக்டர்

ஐ.ஏ.எஸ். அதிகாரியாக பணியாற்றி ஓய்வுபெற்றுள்ள மு.ராஜேந்திரன், மதுரை ஐகோர்ட்டில் 3 ஆண்டுகள் வக்கீலாக பணியாற்றியவர். பின்னர் திருவண்ணாமலை மாவட்ட கலெக்டர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர், தமிழக வேளாண்மைத்துறை ஆணையர் உள்ளிட்ட பல பொறுப்புகளில் பணியாற்றியுள்ளார்.

இதுதவிர பல நாவல்களையும், நூல்களையும் எழுதியுள்ளார்.

## மொழிப்பெயர்ப்பு

இதைப்போல சிறந்த மொழிபெயர்ப்புக்கும் நேற்று விருது அறிவிக்கப்பட்டது. தமிழ் உள்பட 17 மொழிகளுக்கு விருதை அறிவித்தனர். தமிழில் சிறந்த மொழி பெயர்ப்புக்கான விருது 'யாத் வஷேம்' என்ற நாவலுக்காக நல்லதம்பிக்கு வழங்கப்பட இருக்கிறது.

விருதுகள் வழங்கப்படும் தேதி பின்னர் அறிவிக்கப்படும் என சாகித்ய அகாடமி நிறுவனம் தெரிவித்துள்ளது.